ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ பண்டை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பண்டை ॥

திருவரங்கம் - 4

‡பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்
    பதங்களும்⋆ பதங்களின் பொருளும்⋆
பிண்டமாய் விரித்த பிறங்கொளி அனலும்⋆
    பெருகிய புனலொடு நிலனும்⋆
கொண்டல் மாருதமும் குரை கடல் ஏழும்⋆
    ஏழு மா மலைகளும் விசும்பும்⋆
அண்டமும் தானாய் நின்ற எம் பெருமான்⋆
    அரங்க மா நகர் அமர்ந்தானே (1)

இந்திரன் பிரமன் ஈசன் என்றிவர்கள்⋆
    எண்ணில் பல் குணங்களே இயற்ற⋆
தந்தையும் தாயும் மக்களும் மிக்க
    சுற்றமும்⋆ சுற்றி நின்றகலாப்
பந்தமும்⋆ பந்தம் அறுப்பதோர் மருந்தும்
    பான்மையும்⋆ பல் உயிர்க்கெல்லாம்⋆
அந்தமும் வாழ்வுமாய எம் பெருமான்⋆
    அரங்க மா நகர் அமர்ந்தானே (2)

மன்னு மா நிலனும் மலைகளும் கடலும்⋆
    வானமும் தானவர் உலகும்⋆
துன்னு மா இருளாய்த் துலங்கொளி சுருங்கித்⋆
    தொல்லை நான்மறைகளும் மறைய⋆
பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கிப்⋆
    பிறங்கிருள் நிறம் கெட⋆ ஒருநாள்
அன்னமாய் அன்றங்கரு மறை பயந்தான்⋆
    அரங்க மா நகர் அமர்ந்தானே (3)

மா இருங்குன்றம் ஒன்று மத்தாக⋆
    மாசுணம் அதனொடும் அளவி⋆
பா இரும் பௌவம் பகடு விண்டலறப்⋆
    படு திரை விசும்பிடைப் படர⋆
சேயிரு விசும்பும் திங்களும் சுடரும்⋆
    தேவரும் தாம் உடன் திசைப்ப⋆
ஆயிரம் தோளால் அலை கடல் கடைந்தான்⋆
    அரங்க மா நகர் அமர்ந்தானே (4)

எங்ஙனே உய்வர் தானவர் நினைந்தால்⋆
    இரணியன் இலங்கு பூண் அகலம்⋆
பொங்கு வெங்குருதி பொன் மலை பிளந்து⋆
    பொழிதரும் அருவி ஒத்திழிய⋆
வெங்கண் வாள் எயிற்றோர் வெள்ளி மா விலங்கல்⋆
    விண்ணுறக் கனல் விழித்தெழுந்தது⋆
அங்ஙனேயொக்க அரியுருவானான்⋆
    அரங்க மா நகர் அமர்ந்தானே (5)

ஆயிரம் குன்றம் சென்று தொக்கனைய⋆
    அடல் புரை எழில் திகழ் திரள் தோள்⋆
ஆயிரம் துணிய அடல் மழுப் பற்றி⋆
    மற்றவன் அகல் விசும்பணைய⋆
ஆயிரம் பெயரால் அமரர் சென்றிறைஞ்ச⋆
    அறிதுயில் அலை கடல் நடுவே⋆
ஆயிரம் சுடர் வாய் அரவணைத் துயின்றான்⋆
    அரங்க மா நகர் அமர்ந்தானே (6)

சுரி குழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த⋆
    கொடுமையின் கடு விசை அரக்கன்⋆
எரிவிழித்திலங்கு மணி முடி பொடி செய்து⋆
    இலங்கை பாழ்படுப்பதற்கெண்ணி⋆
வரி சிலை வளைய அடுசரம் துரந்து⋆
    மறி கடல் நெறிபட⋆ மலையால்

அரிகுலம் பணி கொண்டலை கடல் அடைத்தான்⋆
    அரங்க மா நகர் அமர்ந்தானே (7)

ஊழியாய் ஓமத்துச்சியாய்⋆ ஒருகால்
    உடைய தேர் ஒருவனாய்⋆ உலகில்
சூழி மால் யானைத் துயர் கெடுத்து⋆ இலங்கை
    மலங்க அன்றடு சரம் துரந்து⋆
பாழியால் மிக்க பார்த்தனுக்கருளிப்⋆
    பகலவன் ஒளி கெட⋆ பகலே
ஆழியால் அன்றங்காழியை மறைத்தான்⋆
    அரங்க மா நகர் அமர்ந்தானே (8)

பேயினார் முலை ஊண் பிள்ளையாய்⋆ ஒருகால்
    பெரு நிலம் விழுங்கி அது மிழ்ந்த
வாயனாய்⋆ மாலாய் ஆல் இலை வளர்ந்து⋆
    மணி முடி வானவர் தமக்குச்
சேயனாய்⋆ அடியேற்கணியனாய் வந்து⋆ எஞ்
    சிந்தையுள் வெந்துயரறுக்கும்⋆
ஆயனாய் அன்று குன்றம் ஒன்றெடுத்தான்⋆
    அரங்க மா நகர் அமர்ந்தானே (9)

‡பொன்னு மா மணியும் முத்தமும் சுமந்த⋆
    பொரு திரை மா நதி புடை சூழ்ந்து⋆
அன்னம் ஆடுலவும் அலை புனல் சூழ்ந்த⋆
    அரங்க மா நகர் அமர்ந்தானை⋆
மன்னு மா மாட மங்கையர் தலைவன்⋆
    மான வேல் கலியன் வாய் ஒலிகள்⋆
பன்னிய பனுவல் பாடுவார்⋆ நாளும்
    பழவினை பற்றறுப்பாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥